**13. அசுரர்கள் கதை**

அசுரர்கள் தேவர்களோடு ஒன்றாகச் சேர்ந்து பாற் கடலைக் கடைந்து அமுதத்தை எடுத்தார்கள். ஆயினுந் தொல்லைப்பட்டு வருந்திய இவர்களுக்கு அமுதம் கிடைக்க வில்லை. திருமால் மோகினி யுருவெடுத்து வந்து மயக்கவே



இவர்கள் 'எங்கட்கு அமுதம் வேண்டாம். இந்த மோகினி கிடைத்தால் போதும்' என்று மயங்கினார்கள். திருமால் அமுதத்தைத் தேவர்கட்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார். மோகினியின்மயக்கில் கலங்கி நின்ற இவர்கள் அறிவு தெளிவடைவதற்குள் அமுத விருந்து முடிந்துவிட்டது. ஊழானதுஏற்படுத்திய வகையினால் அல்லாமல் முயன்று கோடிக்கணக்கான பொருள்களைச் சேர்த்தவர் களுக்கும்அவற்றை நுகரமுடியாது என்று முன்னோர் கூறியது அசுரர்களிடத்தில் பலித்துவிட்டது. நல்வினையில்லாதவனுக்குக் கலப்பால் வரினும் அதனையும் பூனை குடித்துவிட்டுப் போய்விடும் அன்றோ?

(நல்வினைவேண்டும்)